<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>

**அசல் வழக்கு எண். 110/2023**

2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 25 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய செல்வராஜ் பிள்ளை **PW. 1** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 25.11.2024

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | செல்வராஜ் பிள்ளை PW1 | | |
| Father Name | : | சாமிநாதன் | Court | : |
| Village | : | தில்லையாடி | Taluk | : |
| Calling | : | | Religion | : |
| Age | : | 85 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

02.05.2012ல் பிரதிவாதி வாங்கிய கடனுக்கு எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணம் **வாசாஆ1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 29.09.2016ல் பிரதிவாதி எழுதிக்கொடுத்த ஆவணம் **வாசாஆ2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 25.05.2017ல் பிரதிவதிக்கு எனது வழக்கறிஞர் கொடுத்த அறிவிப்பின் அலுவலக நகல் **வாசாஆ3**ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொள்ளாமல் திருப்பி அஞ்சல் உறையுடன் கூடிய அறிவிப்பு **வாசாஆ4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.